# 1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

**அ.வ.எண்.356/2020**

தங்கராஜ் மற்றும் 5 நபர்கள் ... வாதிகள்

–எதிர்–

ஞானம்மாள் மற்றும் 5 நபர்கள் ... பிரதிவாதிகள்

**நீதிமன்ற முத்திரைக் கட்டணத்திற்கான பரிகாரம் அல்லது சொத்தின் விபரம்**

| சட்டப் பிரிவும் உட் பிரிவும் | வழக்கின தன்மை | சொத்தின் வருடாந்திர தீர்வை அல்லது குத்தகை | பிராது பரிகாரத்தின் மதிப்பு அல்லது சொத்தின் கடை விலை | நீதிமன்ற முத்திரைக் கட்டண மதிப்பு |
|---|---|---|---|---|
| 25(d) | விளம்புகை | -- | ரூ.92,700/– | ரூ.2781/– |

// உத்தரவுப்படி //

தலைமை எழுத்தர்

**1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 19 ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>அ.வ.எண்.356/2020</u>**

CNR No.TNTL0600-0513-2020

1. Maharashtra State, Mumbai District, Bandup West S.O. Shrirampada Gandevi Road, Near Pipeline என்ற விலாசத்தில் வசித்து வரும் ஞானமுத்து நாடார் அவர்கள் குமாரர், இந்து, வயது 67 உள்ள தங்கராஜ்.

2. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், செங்குளம், பேரின்பபுரம், கோவில் தெரு, கதவு எண்.2/10 ல் வசித்து வரும் பாக்கியநாதன் அவர்கள் மனைவி, இந்து, வயது 65 உள்ள பாக்கியம்.

3. Maharashtra State, Mumbai District, Bandup West S.O. Shrirampada Gandevl Road, Near Pipeline என்ற விலாசத்தில் வசித்து வரும் பாக்கியநாதன் அவர்கள் குமாரர், இந்து, வயது 42 ரவிகுமார்.

4. Maharashtra State, Mumbai District, Bandup West S.O. Shrirampada Gandevi Road, Near Pipeline என்ற விலாசத்தில் வசித்து வரும் பாக்கியநாதன் அவர்கள் குமாரர், இந்து, வயது 43 உள்ள ஞானராஜ்.

5. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், செங்குளம், பேரின்பபுரம், கோவில் தெரு, கதவு எண்.2/10 ல் வசித்து வரும் பாக்கியநாதன் அவர்கள் குமாரர், இந்து, வயது 37 உள்ள ஜான்.

6. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், செங்குளம், பேரின்புபுரம், கோவில் தெரு, கதவு எண்.2/10 ல் வசித்து வரும் பாக்கியநாதன் அவர்கள் குமாரர், இந்து, வயது 35 உள்ள கோவில்ராஜ். ... வாதிகள்

–எதிர்–

1. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், செங்குளம் கிராமம், வடக்கூர், தார்சாலை தெரு, கதவு எண்.2 ல் வசித்து வரும் லேட். திரு பேதுரு நாடார் அவர்கள் மனைவி, இந்து, வயது 73 உள்ள ஞானம்மாள்.

2. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், செங்குளம் கிராமம், பேரின்பபுரம், சர்ச் தெரு, கதவு எண்.2/42 ல் வசித்து வரும் லேட். திரு பேதுரு நாடார் அவர்கள் குமாரர் இந்து, வயது 53 உள்ள செல்வின்.

3. கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், அகஸ்தீஸ்வரம் தாலுகா, ஈத்தாமொழி ரோடு, கதவு எண்.707 ல் வசித்து வரும் ரவிக்குமார் அவர்கள் மனைவி, இந்து, வயது 50 உள்ள ஜெபராணி.

4. திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், வடக்கன்குளம், தெற்கு தெரு, கதவு எண்.5 ல் வசித்து வரும் திரு நெல்சன் அவர்கள் மனைவி, இந்து, வயது 49 உள்ள ஜெபஸீலா சாலோமி.

5. திருநெல்வேலி, பெருமாள்புரம், ஒச்சன்குசுளம் 1 வது தெரு, செயிண்ட் தாமஸ் தெரு, கதவு எண்.6/7 ல் வசித்து வரும் செயிண்ட் தாமஸ் தெரு, கதவு எண்.6/7 ல் வசித்து வரும் திரு சாமுவேல் முத்தையா அவர்கள் மனைவி, இந்து, வயது 47 உள்ள பரிபூரணம்.

6. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், முன்னீர்பள்ளம் கிராமம், செல்வி நகர், பிள்ளையார்கோவில் தெரு, கதவு எண்.7/13 எச்/10 ல் வசித்து வரும் திரு துரைபாண்டியன் அவர்கள் மனைவி இந்து, வயது 45 உள்ள ஸ்டெல்லா ஜெபபாக்கியம். ... பிரதிவாதிகள்

**(இ.ம.எண்.2/2022 ல் 16.03.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டது.)**

இவ்வழக்கானது ஞானமுத்து நாடார் என்பவர் பேதுரு நாடார் என்பவருக்கு 10.06.1976 ம் தேதி எழுதிக் கொடுத்த ஒத்தி ஆவணம் செல்லத்தக்க ஆவணம் அல்ல என விளம்புகை பரிகாரம் வழங்கக் கோரியும், வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கல் செய்த நாள் – 20.11.2020, 23.11.2020

வழக்குமூலம் – 10.06.1976, 12.10.1983, 06.12.2019, 23.07.2020, 06.08.2020, 01.11.2020 ஆகிய தேதிகளில் பாளையங்கோட்டை வட்டம், செங்குளம் கிராமத்தில் வைத்து உற்பத்தி.

பிராது மதிப்பு – ரூ.92,700/–

தமிழ்நாடு நீதிமன்ற முத்திரை கட்டண சட்டம் பிரிவு 25(d) ன் படி ரூ.2781/– நீதிமன்ற முத்திரை கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு 23.11.2020ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 15.06.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S. வெங்கடேஷ்வரமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 1, 2, 4, 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S. சந்திரசேகர் அவர்கள் ஆஜராகியும், 3, 5 பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாக அறிவிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்...

## <u>தீர்ப்பாணை</u>

1) இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2) செலவுத்தொகை இல்லை.

## <u>செலவு விவரப் பட்டியல்</u>

இருதரப்பிலும் செலவுத் தொகை பட்டியல் தாக்கல் இல்லை.

## <u>தபசில்</u>

1. பாளையங்கோட்டை ரிஜிஸ்டிரேஷன் டிஸ்டிரிக்ட், மேலப்பாளையம் ரிஜிஸ்டிரார் சரகம், செங்குளம் கிராமம், நானாக்குளம் புரவில் வாட்ரேட் புஞ்சை சர்வே நிர்.628/1 எம்எம் செண்ட 25ல் கீழ்பாதி செண்டு 12–1/2க்கு எல்கை. கிழமேல் காலுக்கும் தெற்கு, யோவான் நாடார் நிலத்துக்கும் கிழக்கு, முத்தையா

நாடார் புஞ்சைக்கும் வடக்கு, சாமுவேல் நாடார் நிலத்துக்கும் மேற்கு இதற்குள்பட்ட செண்டு 12-1/2 யும்.

மதிப்பு ரூபாய். 20,700/-

2. ஷை கிராமம் அயன் புஞ்சை சர்வே நிர் 616/3 ம் நிர் ஏக்கர் 12 செண்டு 73 ல் தெற்கோரம் முத்தையா நாடார் புஞ்சைக்கும் தெற்கு, யாக்கோபு நாடார் புஞ்சைக்கும் மேற்கு, காபிரியேல் நாடார் புஞ்சைக்கும் வடக்கு, ரெயில்வே ரோட்டுக்கும் கிழக்கு, இதற்குள்பட்ட எனக்கு பாத்தியப்பட்ட செண்டு 52 ம் தபசில் விபரம் சரி. ஷை சொத்து பாளையங்கோட்டை யூனியனைச் சேர்ந்த செங்குளம் பஞ்சாயத்து போர்டு எல்கைக்குள்பட்டது.

மதிப்பு ரூபாய். 72,000/-

மொத்த மதிப்பு ரூபாய். 92,000/-

2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 19 ம் நாள் என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் போடப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.07.06 13:04:23 +0530

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

அ.வ.எண்.356/2020

**தீர்ப்பாணை**

**19.06.2026**